[2007 ஏப்ரல் 24

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 129, (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

திரு. வை. சிவபுண்ணியம்: அதை மறுக்க முடியாத காரணத்தினாலே அவர்கள் வெளிநடப்புச் செய்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 129, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

129—

தொடக்கப் பள்ளி

***8932—டாக்டர் க. நெடுஞ்செழியன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோகனூர் ஊராட்சி ஒன்றியம், ஆரியூர் அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளியை அரசே ஏற்று நடத்த முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆரியூர் செல்லப்பா நிதியுதவித் துவக்கப் பள்ளியை அரசு நடத்த உத்தேசம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்ம சிந்தனையுள்ள தனவான்களால் 50, 60 ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்படுத்தப்பட்டு, அரசு உதவி செய்து வருகிற பள்ளிகளுக்கு, அந்தப் பள்ளிகளினுடைய புரவலர்கள் அவர்களுடைய பொருளாதார ஏற்றத்தாழ்வுக்கேற்ப பள்ளிகளைப்

2007 ஏப்ரல் 24]

பராமரிக்கின்றனர். பல இடங்களில் தலைமுறை மாற்றத்தாலும், புரவலர்கள் புலம் பெயர்ந்து சென்றதாலும், பள்ளிகளினுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையிலே இருக்கிறார்கள். அந்தப் புரவலர்களின் தொண்டுள்ளத்தைப் போற்றுகின்ற அதே வேளையிலே, அங்கே படிக்கின்ற மாணவர்களின் நலத்தைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு, அறங்காவலர்களை அழைத்துப் பேசி, அந்தப் பள்ளிகளினுடைய அடிப்படைக் கட்டமைப்புகளை உயர்த்தச் சொல்லலாம் அல்லது அவர்களால் இயலாத நேரத்தில் அரசு உதவ முன்வருமா அல்லது அரசே எடுத்துக்கொள்ளுமா? அப்படி எடுத்துக்கொள்ளும்போது, அரசு அவர்களுக்கு இழப்பீடு வழங்க முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட அரசு நிதியுதவி பெறக்கூடிய பள்ளிகளை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், அந்த நிருவாகத்தைச் சார்ந்தவர்கள் முதலிலே அதற்கு ஓர் ஒப்புதலைக் கொடுக்க வேண்டும். அந்தப் பள்ளியினுடைய நிருவாகக் குழுவைக் கூட்டி, பள்ளியிலே இப்போது இருக்கக்கூடிய நிருவாகம் மாத்திரமல்ல, அவர்களுடைய வாரிசுதாரர்களும் இணைந்து இந்தப் பள்ளியை அரசு ஏற்றுக்கொள்வதற்கு இணக்கமாக ஒரு தீர்மானத்தைப் போட்டு, அவர்கள் அதனை அளிக்க வேண்டும். இன்னொன்று, அந்தப் பள்ளியிலே இப்போது நிருவாகத் தகராறு ஏதும் இல்லாதபட்சத்திலே அரசு அதை ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலையும் அங்கே இல்லை. மற்றொன்று, ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், அந்தப் பள்ளியிலே இப்போது இருக்கக்கூடிய பள்ளிக்கான கட்டடம், நிலம் ஆகியவற்றை அரசினிடத்திலே அவர்கள் ஒப்படைக்க வேண்டும். ஆக, இவற்றையெல்லாம் அந்தப் பள்ளி நிருவாகம் செய்தால் அரசால் நிச்சயமாக அதை ஏற்றுக்கொள்ள முடியும். நிதி உதவிபெறும் பள்ளிகளினுடைய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைப் பொறுத்தமட்டிலே, அரசாங்கமே இப்போது அளிக்கக்கூடிய மானியத்திலே 2 சதவீதம் maintenance grant ஆக அவர்களுக்கு ஏற்கெனவே கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். எனவே, அதனுடைய பணிகள் அந்த அடிப்படையிலே செய்யப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடைசியில் கேட்டதுபோல, அப்படி எடுத்துக்கொள்கின்ற நேரத்திலே அரசு அவர்களுக்கு ஏதாவது இழப்பீடு வழங்க ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு இழப்பீடு வழங்குவதற்கு அரசினிடத்திலே இப்போது எதுவும் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிதி உதவிபெறக்கூடிய தனியார் பள்ளிகளின் நிருவாகங்களே முன்வந்து, கட்டடங்கள் மற்றும் நிலங்கள் போன்றவற்றை அரசு எடுத்துக்கொள்வதில் ஆட்சேபனை இல்லையென்று, ஒரு தீர்மான வடிவிலே அரசுக்கு முன்மொழிவுகளை அனுப்பினால், அதை ஏற்றுக்கொண்டு அரசே நடத்துவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். எங்களுடைய பகுதியில் மேட்டூரை அடுத்து, ஸ்ரீ இராமகிருஷ்ணா குருகுலம் உயர்நிலைப் பள்ளி என்ற ஒரு பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளியை அரசு ஏற்று நடத்துவதற்கு, நிருவாகம் அரசுக்கு முன்வந்து ஒப்புதல் அளித்தால், அதனை அரசு ஏற்றுக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு சில பள்ளிகளில்....

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. ஜி.கே.மணி: அரசு உதவி பெறக்கூடிய சில பள்ளிகளில், நீண்ட காலமாக ஆசிரியர் பற்றாக்குறை இருக்கிறது. ஆகவே, மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்பக் கூடுதலான பணியிடங்களை அப்பள்ளிகளுக்கு வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

2007 ஏப்ரல் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, இத்தகைய பள்ளிகளை அரசு ஏற்றுக்கொள்வதற்கு அவர்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அரசுக்கு அனுப்புவார்கள் என்று சொன்னால், அந்த நிலம், கட்டடம் போன்ற தளவாடங்களையெல்லாம் அரசின் பொறுப்பிலே ஒப்படைப்பார்கள் என்று சொன்னால், அரசு அதை ஏற்றுக்கொள்வதற்கு வழிவகை இருக்கிறது. ஏற்கெனவே இந்த மன்றத்திலேகூட அதுபற்றிக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மூலமாக சில பள்ளிகள் கொண்டு வரப்பட்டு, அரசு அவற்றை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிகழ்வுகளும் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த குருகுலம் பள்ளியைக்கூட அத்தகைய ஒரு தீர்மானத்தின்மூலம் அவர்கள் அரசுக்கு அனுப்பியிருப்பார்கள் என்று சொன்னால், அரசு அதை முறைப்படிப் பரிசீலித்து, அரசினுடைய பொறுப்பிலே அதனை ஏற்றுக்கொள்வதற்கு அரசு ஆவன செய்யும்.

அரசு நிதி உதவியைப்பெறுகின்ற பள்ளிகளிலே இருக்கக்கூடிய ஆசிரியர் பணியிடங்களைப் பொறுத்தமட்டிலே, அது நீண்ட காலமாக இருக்கக்கூடிய ஒரு பிரச்சினை. அதற்கு நான் பல முறை இந்த மன்றத்திலேகூட பதில் சொல்லியிருக்கிறேன். அரசினுடைய நிதியாதாரத்தைப் பொறுத்து, மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே, வரக்கூடிய காலங்களிலே நாங்கள் கலந்து பேசி, அது குறித்து ஆவன செய்வதற்கு அரசு ஆராயும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 130, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

130—

மயில்கள் கணக்கெடுப்பு

***8747—திரு. எஸ். ராஜகுமார்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS